## அறிக்கை: சென்னை அண்ணா இன்ஸ்டிட்யூட் ஆ்ஃப் மேனேஜ்மென்ட்டில் ஜூன் 12, 13, 2013ல் நடைபெற்ற சென்னைக்கான உள்ளடக்கிய, நிலையான திடக் கழிவு மேலாண்மைத் திட்டத்தை உருவாக்குதல் குறித்த புதுமைப் பயிலரங்கம்

முகவுரை:

திடக் கழிவு மேலாண்மை பயிலரங்கு 'குப்பை, முறை சாராத் தொழிலாளர்கள், மற்றும் சென்னையின் எதிர்காலம்' என்ற அமைப்பால் (ட்ரான்ஸ்பரன்ட் சென்னையின் ஆராய்ச்சியாளர்கள், மெட்ராஸ் இன்ஸ்டிட்யூட் ஆ்ஃப் டெவலப்மென்ட் ஸ்டடீஸ், க்ளோபல் அலையன்ஸ் ஃபார் இன்ஸினரேட்டர் அல்டர்னேடிவ்ஸ் ஆகியோரால் நடத்தப்படுவது) க்ரீன்வேஸ் சாலையில் உள்ள அண்ணா இன்ஸ்டிட்யூட் ஆ்ஃப் மேனேஜ்மென்ட்டில் ஜூன் 12, 13, 2013ல் நடத்தப்பட்டது. நாற்பதுக்கும் மேற்பட்ட சமூகத்தின் பல பிரிவினரும் இந்தப் பயிலரங்கில் கலந்து கொண்டனர். வருங்காலவியல் நிபுணரான டான்யா ஹிச்சர்ட் மற்றும் ட்ரான்ஸ்பரன்ட் சென்னையின் ப்ரீத்தி நாராயண் இந்தப் பயிலரங்கை முன்னின்று நடத்தினர். பங்குதாரர்களின் பங்கேற்போடு திடக் கழிவு மேலாண்மையில் உள்ள பிரச்சினைகளை சமாளிக்க புதுமையான வழி முறைகளைக் கண்டுகொள்வதே இந்தப் பயிலரங்கின் நோக்கமாகும். ட்ரான்ஸ்பரன்ட் சென்னை, மெட்ராஸ் இன்ஸ்டிட்யூட் ஆ்ஃப் டெவலப்மென்ட் ஸ்டடீஸ், க்ளோபல் அலையன்ஸ் ஃபார் இன்ஸினரேட்டர் அல்டர்னேடிவ்ஸ் ஆகியோரால் மேற்கொள்ளப்படும் இத்திட்டம் குறித்த ஒரு அறிமுகத்துடன் பயிலரங்கு ஆரம்பமானது. இதைத் தொடர்ந்து 'உள்ளடக்கிய', 'மீள் திறன்' மற்றும் 'புதுமை' ஆகியவற்றின் அர்த்தம் என்ன, ஒரு தீர்வு வெற்றிகரமாக செயல்பட அவை ஏன் அவசியம் என்பது குறித்து கலந்தாலோசனை நடைபெற்றது. அதன் பின் குப்பை மேலாண்மையில் எதிர் கொள்ளும் சவால்களின் பல கோணங்களைப் பற்றி பங்கேற்றவர்கள் விவாதித்தனர். பண்புகள், கொள்கைகள் மற்றும் சட்ட திட்டங்கள் ஆகியவற்றை கருத்தில் கொண்டு, உள்ளடக்கிய, சமத்துவமான, நிலையான தீர்வுகளை உருவாக்கும்போது இந்த சவால்கள் அடிப்படையாக எடுத்துக் கொள்ளப்பட்டன.

**திடக் கழிவு மேலாண்மையில் உள்ள சவால்கள்:**

கலந்தாய்வின்போது குறிப்பிடப்பட்ட மிக முக்கிய சவால்கள் இங்கே பட்டியல் இடப்பட்டுள்ளன:

அதிக வருவாய் கொண்டோர் குடியிருக்கும் பகுதிகளில் தினமும் குப்பை அகற்றப்படுகிறது; ஆனால் குடிசைப் பகுதிகளில் சரியான சேவை இல்லை என்பதோடு வாரக் கணக்காக குப்பை அகற்றப்படுவதில்லை. இங்கு வசிப்பவர்கள் கடலிலோ, கிணறுகளிலோ, பக்கிங்ஹாம்

கால்வாய் போன்ற இடங்களிலோ குப்பையைக் கொட்டுகின்றனர். சில பகுதிகளில் குப்பை எரிக்கப்படுகிறது.

துப்புரவுத் தொழிலாளர்கள் நலச் சங்கத்தின் பிரதிநிதி ஒருவர் துப்புரவுத் தொழிலாளர்களுக்கு பாதுகாப்பு உபகரணங்கள் இல்லாமல் இருப்பதையும் அவர்களுக்கு ஏற்படும் சுகாதாரப் பிரச்சினைகளையும் பற்றி எடுத்துக் கூறினார். ஒரு முறையான திடக் கழிவு மேலாண்மைத் திட்டத்தில் முறை சாரா குப்பைத் தொழிலாளர்களை ஒருங்கிணைப்பது பற்றிய பிரச்சினைகள் குறித்தும் விவாதிக்கப்பட்டது – உதாரணத்திற்கு, குப்பை சேகரிக்கும் தொழிலில் ஈடுபட்டிருப்பவர்களில் கணிசமான தொகையில் இருக்கும் நரிக்குறவர் சமுதாயத்தின் வாழ்க்கை முறை, 9 முதல் 5 மணி வரையிலான ஒரு காலக் கெடுவுக்கு உட்பட்ட வேலைக்கு ஏற்றதல்ல.

வர்த்தக நிறுவனங்கள் தங்களின் குப்பையை அகற்றுவதற்கு பொறுப்பேற்கச் செய்ய வேண்டும். மேலும் மாநகராட்சி அந்த சேவையை வழங்கினால் அதற்கான கட்டணம் வசூலிக்கப்பட வேண்டும். இதை அமுல்படுத்துவதில் மாநகராட்சிக்கு பல சிக்கல்கள் உள்ளன – காய்கறிச் சந்தையில் விற்பனை செய்பவர்கள் குப்பையை தெருவில் கொட்டுகிறார்கள். ஆனால் அதற்கு அவர்களிடம் அபராதம் வசூலிக்கப்படுவதில்லை. ஒரே சட்ட எல்லையில் அதிகாரம் செலுத்தும் வெவ்வேறு அரசுத் துறைகளிடையே ஒருங்கிணைப்பு இல்லாதது ஒரு பிரச்சினையாக உள்ளது. நிலைமையை சீரமைக்க மாநகராட்சியுடன் இணைந்து செயல்படுவதில் குடியிருப்பவர்களிடம் அர்ப்பணிப்பு இல்லாமல் இருப்பது அதிகமாக பேசப்பட்ட ஒரு சவால்.

பிற நகரங்களில் இயங்கும் சில தீர்வுகளின் உதாரணங்களை சென்னையிலும் பின்பற்றலாம் என்று கூறிய பங்கேற்ற ஆராய்ச்சியாளர்கள் அந்த உதாரணங்களைப் பகிர்ந்து கொண்டனர். உதாரணத்திற்கு, பெங்களூருவில் குப்பை சேகரிப்பவர்கள் கண்டறியப்பட்டு அவர்களுக்கு அடையாள அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன. இது அரசு மற்றும் காவல் துறையினரின் அச்சுறுத்தல்களில் இருந்து அவர்களுக்கு பாதுகாப்பு அளிப்பதோடு, அரசின் சலுகைகளை அவர்கள் பெற்றுக் கொள்ள உதவுகிறது. 1993ல் புனே நகரின் குப்பை சேகரிப்பவர்கள் ஒரு தொழிற்சங்கத்தை உருவாக்கி, அரசு மற்றும் ஒரு தன்னார்வத் தொண்டு நிறுவனத்தின் உதவியுடன், சங்க உறுப்பினர்களுக்கு அடையாள அட்டை மற்றும் சுகாதார காப்பீட்டைப் பெற்றுத் தந்தனர்.

**கருத்துக்களை உருவாக்குதல்:**

சவால்களின் அடிப்படையில், அவற்றை மேற்கொள்ள கருத்துக்களை உருவாக்குமாறு பங்கேற்பாளர்கள் கேட்டுக் கொள்ளப்பட்டனர். சூழல் விளக்கப் பயிலரங்கில் உருவாக்கப்பட்ட சூழல்களின் சுருக்கம் பங்கேற்பாளர்களுக்குக் கொடுக்கப்பட்டு, அந்த உச்ச சூழல்களுக்கும் பொருத்தமான கருத்துக்களை உருவாக்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டனர். இந்தக் கருத்துக்கள் பண்புகள், கொள்கைகள் மற்றும் சட்ட திட்டங்களோடு இயைந்து உள்ளன என்பதோடு அவை

புதுமையானதாகவும், மீள் திறன் கொண்டதாகவும், உள்ளடக்கியதாகவும் உள்ளன என்பதை உறுதி செய்ய ஒரு கடுமையான செயல் முறை மூலம் தெரிவு செய்யப்பட்டன. வாக்கெடுப்பு மூலம், மிக பிரபலமான மூன்று கருத்துக்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு அவை மேம்படுத்தப்பட்டன.

**புதுமைகள்:**

பயிலரங்கின் இறுதியில் சென்னை நகரம் சந்திக்கும் திடக் கழிவு மேலாண்மைப் பிரச்சினைகளை சமாளிக்க சில புதுமையான வழி முறைகளைத் தேர்ந்தெடுத்தனர். பிரச்சினையை சிறந்த முறையில் சமாளிக்க இந்த வழி முறைகள் அனைத்தும் ஒரு சேர செயல்படுத்தப்பட வேண்டும்.

இதன் முதல் படி வார்டு 173ன் தேர்ந்தெடுப்பட்ட பகுதிகளில் விவரமான வரைபடம் தயாரிக்கப்பட வேண்டும். இதன் அடிப்படையில் இதே பணியை நகரின் அனைத்து பகுதிகளிலும் மேற்கொள்ளும் விதமாக ஒரு மாதிரி வார்ப்புரு உருவாக்கப்படும். இந்த நடவடிக்கை, உருவாகும் குப்பையின் அளவு, குப்பையின் தன்மை, குப்பை உற்பத்தியாளர்களை வகைப்படுத்துதல் போன்ற குப்பை சம்பந்தப்பட்ட விவரங்களை உறுதிப்படுத்திக் கொள்ள உதவும். இந்த நடவடிக்கை குப்பை அகற்றுவதில் இடையீடு செய்யப்போகும் சென்னை மாநகராட்சி அல்லது அதை நடைமுறைப்படுத்த இருக்கும் அமைப்பு விவரங்களை நன்கு புரிந்து கொண்டு சரியான முடிவுகளை எடுக்க உதவியாக இருக்கும். இந்த வரைபடம் உருவாக்கும் பணி குப்பை சேகரிப்பில் ஈடுபட்டுள்ள முறை சாராத் தொழிலாளர்கள் மற்றும் இந்த வார்டில் வசிப்பவர்கள் ஆகியவர்களின் உதவியுடன் மேற்கொள்ளப்படும் ஒரு சமூகப் பணியாக அமையும். இதனால் இந்தப் புதுமையில் அவர்களை ஈடுபடுத்துவதோடு, இந்தப் பணியின் முடிவுகள் மீதான உரிமைகளை அவர்களுக்கு ஏற்படுத்த உதவும்.

இரண்டாவதாக குப்பை சேகரிப்பவர்களின் ஆட்கணக்கெடுப்பு எடுக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது. அவர்களது தொழிலை அங்கீகரித்து அவர்களுக்கு அடையாள அட்டை வழங்குதல், அவர்கள் மருத்துவ வசதி, பாதுகாப்பு உபகரணங்கள், அவர்கள் குழந்தைகளுக்கான கல்வி மற்றும் இதர வசதிகள் பெற உதவுவது இந்தக் கணக்கெடுப்பின் நோக்கமாகும். அவர்கள் நலனுக்காக உழைக்கவும், துப்பரவுப் பணிக்கான அரசின் ஒப்பந்தப் புள்ளிகளில் பங்கேற்கவும் உதவும் ஒரு குப்பை சேகரிப்போர் அமைப்பை உருவாக்குவதே இதன் இறுதி நோக்கமாகும். (தற்போது குப்பை சேகரிப்போரின் பிரதிநிதித்துவ அமைப்பு எதுவும் சென்னையில் இல்லை)

மூன்றாவதாக கட்டாய குப்பை பிரித்தெடுத்தலை உள்ளடக்கிய குப்பை சேகரித்தல், இரண்டாம் நிலை பிரித்தெடுத்தல், மறு சுழற்சி, மேலும் வெவ்வேறு விதமான குப்பை உற்பத்தியாளர்களுக்கான வெவ்வேறு செயல்படுத்தும் நுட்பத்தைக் கொண்ட, ஒரு பரவலாக்கப்பட்ட குப்பை மேலாண்மைத் திட்டத்தை 173ஆவது வார்டில் பரிந்துரைப்பது. வரைபட தயாரிப்பு பணியின் மூலம் சேகரிக்கப்பட்ட தகவல்களின் அடிப்படையில் இந்தத் திட்டம் வடிவமைக்கப்படும். முறை சாரா குப்பை சேகரிக்கும் தொழிலாளர்களை

ஒருங்கிணைக்கும் இந்தத் திட்டம் அவர்களுக்கு சுத்தமான, பாதுகாப்பான ஒரு பணிச் சூழலை உருவாக்குவதோடு ஒரு கண்ணியமான வாழ்க்கை முறையையும் அமைத்துக் கொடுக்கும். நடைமுறை செயல்பாடு இந்தத் திட்டத்தை இணங்கி உள்ளதா என்று சுற்றுப்புற, வட்டார மற்றும் வார்டு அளவிலான பங்குதாரர்களின் குழுக்கள் மூலம் கண்காணிக்கப்படும்.

இறுதியாக இந்தப் பணியை அடுத்த கட்டத்திற்கு எடுத்துச் செல்ல ஒரு செயற்குழு உருவாக்கப்படும் என்று முடிவெடுக்கப்பட்டது. இந்த செயற்குழுவின் உறுப்பினர்களில் தற்போதைய இயக்க செயற்குழு (ஐ. எஃப். எம்.ஆர்-ன் ட்ரான்ஸ்பரன்ட் சென்னை, மெட்ராஸ் இன்ஸ்டிட்யூட் ஆஃப் டெவலப்மென்ட் ஸ்டடீஸ், க்ளோபல் அலையன்ஸ் ஃபார் இன்ஸினரேடர் அல்டர்னேடிவ்ஸ் ஆகிய மூன்று அமைப்புகளில் இருந்தும் ஒவ்வொரு பிரதிநிதியைக் கொண்டது), வார்டு 173ல் குடியிருப்பவர்களின் இரண்டு பிரதிநிதிகள் (குடிசைப் பகுதி மற்றும் பிற பகுதிகள்), முறை சாராத் துறையைச் சேர்ந்த குப்பை சேகரிப்பவர்களில் இருந்து ஒரு பிரதிநிதி மற்றும் வர்த்தக நிறுவனங்களுக்கு ஒரு பிரதிநிதி ஆகியோர் அடங்குவர். (இந்த செயற்குழுவின் பரிந்துரைகளை செயல்படுத்துவதற்கு செயற்குழுவிற்கு அர்ப்பணிப்புடன் வேலை செய்யக்கூடிய ஒரு அணி தேவை.)

மேற்குறிப்பிட்ட பணிகளை ஆரம்பிக்க, பயிலரங்கு முடிந்து இரண்டு வாரங்களுக்குள் ட்ரான்ஸ்பரன்ட் சென்னை, மெட்ராஸ் இன்ஸ்டிட்யூட் ஆஃப் டெவலப்மென்ட் ஸ்டடீஸ், க்ளோபல் அலையன்ஸ் ஃபார் இன்ஸினரேடர் அல்டர்னேடிவ்ஸ் ஆகிய மூன்று அமைப்புகளும் இந்த செயற்குழுவை உருவாக்கும்.